முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 15/2016

வாதி தரப்பு சாட்சி-1 சண்முகம் திரு.ஆர்.ஞானசேகர் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.09.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| பெயர் | சண்முகம் | கிராமம் | |
|---|---|---|---|
| த/பெ / க/பெ. | | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 33 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் இந்த வழக்கை 15.02.2013 பத்திரம் செல்லாது என்றும், 09.05.2013 பத்திரம் செல்லாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நான் அவ்வாறு கேட்கவில்லை. பட்டா செல்லாது என கேட்டுள்ளேன். எனக்கு பிரச்சனை 2 ம் அயிட்ட சொத்தில் தானா என்றால் ஆமாம். 1 ம் அயிட்ட சொத்தில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 2 ம் அயிட்ட சொத்தை யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் சுந்தரநாதன் என்பவரிடம் இருந்து வாங்கினேன். 2 ம் அயிட்ட சொத்தின் உண்மையான உரிமையாளர் யார் என தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி இரசீது வா.சா-ஆ.2 முதல் அயிட்ட சொத்திற்குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சண்முகா ஹார்டுவேர் என எழுதி அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012 ம் வருடத்திற்குரிய இரசீது மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. மற்ற வருடத்திற்குரிய இரசீதுகள் என்னிடம் இல்லை என்றால் ச ரிதான். நான் சிந்தாமணிபட்டி காவல் துறையில் புகார் கொடுத்தது இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் கொடுத்தேன். மேற்படி வா.சா.ஆ 3 இரசீதை வைத்து தான் புகார் கொடுத்தேனா என்றால் நியாபகம் இல்லை. 29.03.2001 என்ற தொழில்வரி இரசீதை வைத்து தான் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 கண்ட தொழில் வரி இரசீதில் விலாசம் இல்லை

என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் பின் இணைப்பாக கண்டுள்ள பட்டாவில் 22.03.2013 என சுந்தரநாதன் பெயரில் பட்டா இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் வழக்குடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெரியசாமி பண்டாரம் 2012 ல் இறக்கும் வரை அவர் பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் அது பற்றி தெரியாது. சுந்தரநாதன் தனது பெயரில் பட்டாவை மாற்றும் போது பெரியசாமி பண்டாரத்தின் வாரிசுகளுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது.

3. வா.சா-அ 4 ல் கண்டுள்ள பட்டா, நிலவரி, அடங்கல் பதிவேடு ஆகியவை இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 பட்டாவும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 2 ம் அயிட்ட சொத்தை பொறுத்து 2012 ம் வரை பெரியசாமி பண்டாரம் பெயரில் தான் வீட்டு வரி இரசீது இருந்தது என்றால் எனக்கு தெரியாது. கிரையம் பெறுவதற்கு முன்பு சுந்தரநாதன் பெயரில் வீட்டு வரி இரசீது இருந்தது. எனது கிரைய ஆவணத்தில் வீட்டு வரி இரசீது எண், மின் இணைப்பு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நியாபகம் இல்லை. வா.சா.ஆ-9 ஆவணமானது பிரதிவாதிகளை ஏமாற்ற சுந்தரநாதனிடமிருந்து நான் எழுதி வாங்கியுள்ளேன் என்றும், எனவே அந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 2 ம் அயிட்ட சொத்தின் மின் இணைப்பு எண்.782 என்றால் நியாபகம் இல்லை.

4. வீட்டு வரி இரசீதும் , மின் இணைப்பு இரசீதும் 2012 வரை பெரியசாமி பண்டாரத்தின் பெயரில் இருந்தது என்றும், அதன் பின்னர் அவரது சகோதரி தங்கம்மாள் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1, 2 ம் அயிட்ட சொத்துக்களை நான் எப்போதும் அனுபவம் செய்தது இல்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 22.07.2004 பெரியசாமி பண்டாரம் 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி கொடுத்தை எதனடிப்படையில் மறுத்துள்ளேன் என்றால் தெரியவில்லை. 21.03.1983 ல் பெரியசாமி பண்டாரம் சுந்தரநாதனுக்கு கிரைய ஆவணம் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என பதிலுரையில் கூறியுள்ள விவரத்தை எதனடிப்படையில் மறுத்துள்ளேன் என்றால் தெரியவில்லை. பிரதிவாதிகள் சுந்தரநாதன் கிரையம் பெற்றது மோசடியானது என சொல்லியுள்ள சங்கதிகளை ஊரில் விசாரித்தேனா என்றால் இல்லை.

5. சுந்தரநாதன் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. சுந்தரநாதன் 2017, 2018

வருடத்தில் இறந்தார் என்றால் வருடம் தெரியாது. நான் சுந்தரநாதனிடமிருந்து மோசடியாக கிரையம் பெற்றுக் கொண்டு அதை மறைக்க பொய்யாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நாகப்பிள்ளை மகன் ஆனந்த எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை. வழக்கு தாக்கல் செய்த பின்னர் இறந்தாரா என்றால் தெரியவில்லை. ஆனந்தையும், சுந்தரநாதனையும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு ஆனந்தையும், சுந்தரநாதனையும் பதிலுரையில் கண்ட விவரங்கள் குறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. ஆனந்தையும், சுந்தரநாதனையும் வைத்து ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் தெரியாது. வா.சா.ஆ.10 ல் உள்ள விவரங்கள் நான் எழுதியதா என்றால் இல்லை. யார் எழுதினார்கள் என்றால் தெரியவில்லை.

6. அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையோ, சுவாதீனமோ கிடையாது என்றால் சரியல்ல. நான் சுவாதீனம் பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கே பொய்யான வழக்கு என்றும், தாவா சொத்தும் அனைத்தும் காளியம்மாள், தங்கம்மாள், சொர்னம், காத்தவராயன் ஆகியோர்களுக்கு சொந்தம் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதிக்கு விற்றதும், 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதி விற்றதும் செல்லும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. பெரியசாமி பண்டாரத்தின் பெயரில் உள்ள வீட்டு வரி இரசீது, பட்டாவை தாக்கல் செய்தால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யானது என ஒப்புக்கொள்வேனா என்றால் அது பற்றி தெரியாது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**